**Case No. STC. No.64/2025, Dated: 25.03.2026**

**PW-3- சிவக்குமார் த/பெ கவுண்டன் (CMP.No.721/2025-ன் படி மனு அனுமதியின் பெயரில் குறுக்கு விசாரணை)**

**(சத்தியபிரமாணம் திரு. E. கோவிந்தராசு, இருக்கை எழுத்தர் நிலை-3 அவர்களால் செய்யப்பட்டது).**

**(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 11.43A.M):-**

**(எதிரி ஆஜர்) எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். அ.சா.1 எனது மச்சான் என்றால் சரிதான். அ.சா.2 அ.சா.1 ன் மனைவி என்றால் சரிதான். அ.சா.4 மற்றும் அ.சா.5 எனது உறவினர் என்றால் தூரத்து பங்காளிகள். வழக்கு சம்பவம் எங்கு நடந்தது என்றால் எதிரியின் வீட்டிற்கு முன்பு நடந்தது. ஊர் மந்தையிலிருந்து ஆஜர் எதிரியின் வீடு 1 பர்லாங் தூரம் இருக்குமா என்றால் 150 அடி இருக்கும். எதிரியின் கார் செட்டிற்கு முன்னால் தான் வாய் தகராறு நடந்தது என்றால் சரிதான். எவ்வளவு நேரம் சண்டை நடந்தது என்றால் 10 நிமிடம் நடந்தது. ஊர் மந்தையில் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். பஞ்சாயத்து மற்றும் சந்திப்புகள் போன்றவை ஊர் மந்தையில் வைத்து நடைபெறும் என்றால் சரிதான். ஊர் மந்தையில் சண்டை நடக்கும் போது அங்கு இருந்த பொதுமக்கள் அதனை வெடிக்கை பார்த்தனர் என்றால் பார்த்தனர். அ.சா.1 சம்பவ தினத்தன்று காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றாரா என்றால் சென்றார். அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். சம்பவ தினத்தன்று போலீசார் விசாரணை செய்தனரா என்றால் சரிதான்.

2. அ.சா.1–யை சம்பவ தினத்தன்று விசாரணை செய்தனர். வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்த சம்பவ தினத்தை பின்னிட்டு நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியை ஊரை விட்டு ஒதுக்கி வைத்தாக வருவாய் கோட்டாட்சியரிடம் புகாரினை கொடுத்தார் என்றால் சரிதான். அ.சா.1 ஊர் தலைவர் என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியரிடம் அ.சா.1 மற்றும் அண்ணாமலை கோவில் நிர்வாகிகளுக்கு எதிராக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தனர் என்றால் சரிதான். அ.சா.1 என்னை பார்க்க வந்தபோது தான் மேற்படி வழக்கு சம்பவம் நடைபெற்றது என குறுக்கு விசாரணையில் சொல்லிய சங்கதியை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்னது போல எதிரி அ.சா. 1 தாக்கவில்லை, கெட்ட வார்த்தையால் பேசவில்லை என்றும் அ.சா1 எனது மச்சான் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொது இடத்தில் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டுவிட்டு அதனை பொதுமக்கள் வேடிக்கை பார்த்தாகவும் குறிப்பிட்டுவிட்டு மேற்படி பொதுமக்களை சாட்சியாக விசாரித்தால் உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதற்காக குடும்ப உறுப்பினர்களை சாட்சியாக வழக்கில் சேர்த்துள்ளனர் என்றால் சரியல்ல.

3). சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் வழக்க சம்பவம் நடைபெறவில்லை என்றும், சம்பவம் நடந்தாக சொல்லப்படும் தினத்தன்று எதிரி ஊரில் இல்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.04 A.M):–**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.